LIBRARY
5 - AUG 1965
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 22nd March 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, at two of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

மேரி அரசிக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புக்கான வகுப்புகள்

*293 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன்** : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

(அ) சென்னை, மேரி அரசிக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புக்கான வகுப்புக்களைத் தொடங்க உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எந்தெந்தப் பாடங்களுக்கு எந்தெந்த ஆண்டுகளில் வசதி செய்யப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) சென்னை மேரி அரசிக் கல்லூரியில் எந்தப் புதிய பாடத்திலும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளை ஏற்படுத்தும் உத்தேசம் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(*a*) There is no proposal to open Post-Graduate Course in any new subject in the Queen Mary's College, Madras.

(*b*) The question does not arise.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, சென்னை மேரி ராணி கல்லூரியில் பட்ட மேற்படிப்புக்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். பெண்கள் நிறையப் பேர் மேற்படிப்பு படிக்க விரும்புகிறபடியால், அரசாங்கக் கல்லூரியாகிய மேரி ராணிக் கல்லூரிக்கு ஏன் வசதி செய்து தரக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது மேரி ராணிக் கல்லூரியில் ஜாக்ரபி, ஹோம் மானேஜ்மெண்ட், தமிழ் இவைகளில் எம்.ஏ., எம்.எஸ்ஸி. போன்ற படிப்புகள் படிப்பதற்கு ஏற்பாடுகள் இருக்கின்றன. அதற்கு மேலும் படிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றால் கட்டடத்தை விஸ்தரிக்க வேண்டும். இருக்கிற கட்டடம் போதாது. இருக்கிற கட்டடத்திலே புதிய பாடங்களை ஏற்படுத்த பல்கலைக் கழகம் அனுமதி அளிக்காது.

திரு. அ. தியாகராஜன் : இந்த பட்டப்படிப்பு முறையில், எல்.எம்.இ., எஸ்.வி.இ., எல்.இ.இ., படித்தவர்கள் பி.இ. மேல்படிப்பு படிக்கக்கூடிய வகையிலே பகுதி நேரக் கல்லூரியைத் திறக்க அரசாங்கம் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : கனம் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கட்டடத்திலே போதிய வசதி இல்லையென்றால் மேற்படிப்பிற்குப் பல்கலைக் கழகம் அனுமதி அளிக்காது என்று சொன்னார்கள்.

[22nd March 1965

எம்.ஏ., எம். எஸ்ஸி. போன்ற பட்டங்களால்தான் கல்வியின் தரம் உயரும் என்று அறிகிறோம். ஆகையால் இன்றியமையாத இந்தக் கல்வியைப் பெண்களுக்கும் அளிக்கும் வகையில் கட்டடத்தை விஸ்தரிக்க உடனடியாக அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: புகுமுக வகுப்புகளிலேயே பெண்கள் அதிகமான பேர்கள் சேர விரும்பினார்கள். அதற்காகப் பல்கலைக் கழகத்தின் விசேஷ அனுமதி பெற்று கட்டடம் விஸ்தரிக்கப்பட்டு, மேற்படிப்பிற்கு ஜாக்ரபி, ஹோம் மானேஜ்மெண்ட், தமிழ் போன்ற பாடங்கள் மூன்றும் வைக்கப்பட்டு இருக்கின்றன. இதிலே அவர்கள் சேர்ந்து படிக்கலாம். இன்னும் அதிகமாக விஞ்ஞானம் போன்ற பாடங்கள் மேற்படிப்பிற்கு வேண்டுமென்றால், அதற்கு வேண்டிய மாணவிகள் வந்தால்தான் அரசாங்கம் அதில் கவனம் செலுத்த முடியும்.

திரு. ஜே. மாதா கவுடர்: மேரி ராணிக் கல்லூரி நிர்வாகஸ்தர்கள் மேற்படிப்பிற்கு அனுமதி வேண்டுமென்று ஏதாவது விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கேள்வி புரியவில்லை.

திருமதி டி. என். அனந்தநாயகி: இப்பொழுது இருக்கக்கூடிய வகுப்புகளில் சேருவதற்கு வேறு பல பெண்களிடமிருந்து அப்ளிகேஷன் வந்தால் அப்பொழுது விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: வட சென்னையில் பெண்களுக்கு ஒரு புதிய கல்லூரி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதை விஸ்தரிக்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்தக் கல்விக்காக 30 கோடி ரூபாய் செலவிடுகிறோம். கல்லூரிகளுக்குச் செலவிடுகிற தொகை மிகக் குறைவாக இருக்கிற காரணத்தினால் அரசாங்கம் இந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு வருகிற ஆண்டிலேயாவது முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பழைய கட்டடம் போதாது, புதிய கட்டடம் வேண்டியிருக்கிறது. கும்பகோணத்திலும், வடசென்னையிலும் பெண்கள் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. (திரு. ம. கமலநாதன் கிருஷ்ணகிரி . . .) கிருஷ்ணகிரியில் பெண்கள் கல்லூரி அல்ல. மாணவிகள் ஆரம்பப் பள்ளியிலும், உயர்நிலைப் பள்ளியிலும்தான் அதிகமாகப் படிக்கிறார்கள். கல்லூரிகளில் குறைவாகத்தான் சேருகிறார்கள். அதனால் செலவும் குறைவு.

திருமதி சி. குழந்தையம்மாள்: மேற்படிப்பிற்கு அதிகமான இடம் கொடுக்கக்கூடாது என்பது பல்கலைக்கழகத் துணைவேந்தரின் கருத்து. ஏனென்றால் அவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்றபடியால், எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. அதை அதிகப்படுத்துவதற்கு வேறு வழி வகைகளை அரசாங்கம் ஆலோசித்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்கவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இப்பொழுது இருக்கிற முறைப்படி எத்தனைக் கல்லூரிகள் புதுமுக வகுப்புக் கல்லூரிகளாக இருக்கின்றன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கல்லூரி முதலில் தொடங்கும் பொழுது புதுமுக வகுப்புகள்தான் ஆரம்பிக்கப்படுகின்றன. அதற்குப் பிறகு படிப்படியாக மேற்படிப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

22nd March 1965]

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, மேற்படிப்பிற்கு இடமின்மை காரணத்தினால், வசதி செய்ய முடியாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகையால் ஷிப்ட் முறையை மேற்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மேற்படிப்பிற்கு விஞ்ஞானம் படிக்க வேண்டுமென்றால் லேபரடரி வேண்டும். ஹாஸ்டல் வசதி வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் போதிய வசதி இல்லாமல் இருந்தால், பல்கலைக் கழகம் அனுமதி அளிப்பதில்லை.

திருமதி டி. என். அனந்தநாயகி : போஸ்ட் கிராஜுவேட் வகுப்பில் சேருவதற்கு யூனிவர்சிடி மூலம் அப்ளிகேஷன் போடவேண்டும். ஃபஸ்ட் கிளாஸில் பாஸ் பண்ணுகிறவர்களுக்குத்தான் இடம் கொடுக்கிறார்கள். இல்லாவிட்டால் கொடுப்பதில்லை. மற்றவர்களுக்கும் ஏன் அந்த வாய்ப்பு கொடுக்கக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போஸ்ட் கிராஜுவேட் படிப்பு உயர்ந்த படிப்பு. அது பலன் தரக்கூடிய படிப்பாக இருக்க வேண்டும். அதற்கு நல்ல வாய்ப்பு வேண்டும். வாய்ப்பு இல்லாமல் ஏதோ போஸ்ட் கிராஜுவேட் பாடம் இருக்க வேண்டும் என்பதற்காக வைக்கவில்லை. நல்ல வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் குறைந்தபட்சம் இவ்வளவு மார்க் இருக்க வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள்.

ஆரம்பப் பள்ளிகளை அரசாங்கம் நடத்துதல்

* 294 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) தஞ்சையில் அண்மையில் நடைபெற்ற ஆரம்ப ஆசிரியர்கள் மாநாட்டில் எல்லா ஆரம்பப் பள்ளிகளையும் அரசாங்கமே ஏற்றுக்கொண்டு நடத்த வேண்டுமென்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டதா ?

(இ) ஆமெனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) இவ்விஷயம் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

(*a*) Yes.

(*b*) The matter is under examination.

புலவர் கா. கோவிந்தன் : ஆரம்பப் பள்ளிகள் பஞ்சாயத்து பொறுப்பிலே ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. யூனியன் எல்லையிலே சில தனியார் ஆரம்பப் பள்ளி வைத்து நடத்தி வருகிறார்கள். அவர்கள் திடீரென்று அந்தப் பள்ளிகளை மூடிவிடுகிறார்கள். அந்தப் பள்ளிகளில் வேலை பார்த்த ஆசிரியர்களின் 10, 15 ஆண்டு சர்வீஸ் பாதிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட நிலையிலே அந்த ஆசிரியர்களைப் பஞ்சாயத்து யூனியன் ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவைகளைப் பஞ்சாயத்து யூனியன்தான் கவனிக்க வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : இந்தப் பஞ்சாயத்து யூனியன் நடத்தி வருகின்ற ஆரம்பப் பள்ளிகளை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டுமென்று ஆசிரியர்களின் கூட்டணித் தீர்மானம் இருக்கிறது. அங்கே எய்டட் ஸ்கூலாக இருப்பதனால்தான் தொந்தரவுக்குக் காரணமாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.